**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**

**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 02ம் நாள்

**இ.ம.எண். 3/2025**

**இல்**

**அசல் வழக்கு எண். 19/2023**

1. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி, பொறையார் கிராமம், பெரிய பள்ளி வாசல் தெரு எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் ஹமீது ஒலி குமாரர் 65 வயதுள்ள H. ஷேக் இஸ்மாயில். ..மனுதாரர்கள்/பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர்

2. புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம், காரைக்கால் டவுன், 93B மைதீன் பள்ளி தெருவில் வசிக்கும் தாஹா மரைக்காயர் குமாரர் 68 வயதுள்ள ஆரிப் மரைக்காயர். ..பிரதிவாதி

//எதிர்//

தரங்கம்பாடி டி.மு.லாகா, தரங்கம்பாடி தாலுக்கா, எடுத்துக்கட்டி சாத்தனூர், 3/20 வடக்கு தெருவில் வசித்து வரும் முகம்மது ஜக்காரியா குமாரர், 62 வயதுள்ள முகம்மது பாரூக். ..எதிர்மனுதாரர்/ வாதி

மனுதாரரால் இம்மனுவானது, மனுதாரருக்கு பிரதிவாதி வழங்கிய அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக மனுதாரர் இந்த பிராதை தாக்கல் செய்யவும் வழக்கை நடத்தவும் அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 30.06.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 30.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று (11.09.2025) இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று (18.09.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2025.09.18 16:22:42 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**